Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate, Gingee
CC.**No. 24 / 2019** **Pw1**

Name - மணி
Father Name - காத்தவராயன்
Village - கண்ணலம் கிராமம்
Taluk -
Religion -
Age - 56

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **20.01.2021**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கண்ணலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு காலை சுமார் 6.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எங்கள் ஊரை சேர்ந்த மணிமாறன் என்பவர் எனக்கு போன் செய்து மேல்மலையனூர் பெட்ரோல் பங்க் அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற எனது பெரியப்பா வெள்ளை மகன் குமார் மற்றும் கோபிநாத் ஆகியோர் மீது டி,வி.எஸ்-50 வாகனம் மோதி குமாருக்கு பலத்த காயம் ஏற்பட்டதாக தகவல் தெரிவித்தார். நான் குமார் மூண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தெரிந்துகொண்டு அங்கு சென்று பார்த்தேன். குமாருக்கு மார்பில் பலத்த காயம் ஏற்பட்டு சுயநினைவுயின்றி சிகிச்சையில் இருந்தார். அவரை மருத்துவர் ஆலோசனைபடி சென்னை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு சுமார் ஒரு மாதம் காலம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மேற்படி விபத்தில் கோபிநாத்திற்கு என்பவருக்கு லேசான காயம் ஏற்பட்டது. கோபிநாத் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. கோபிநாத் வாகனத்தின் மீது மோதிய டிவிஎஸ் 50 வாகனத்தின் பதிவு எண் மற்றும் அதனை ஓட்டி வந்த நபர் விவரம் குறித்து ஏதும் தெரியாது. டி.வி.எஸ். 50 ஓட்டி வந்த நபர் வேட்டைக்காரன்பட்டி கிராமத்தை சேர்ந்த நபர் என்று விபத்து குறித்து எனக்கு போனில் தகவல் தெரிவித்த மணிமாறன் தகவல் சொன்னார். விபத்து நடந்து 2வது நாள் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் அ.சா. ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.
அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையிலும், புகாரிலும் 02.05.2019 மாலை 5.30 மணிக்கு மேல்மலையனூர்

பூங்காவனம் பங்க் கடையில் நான் நின்று கொண்டிருந்தபோது எங்கள் ஊரை சோந்த கோபிநாத் என்பவர் டின். 22சி 1800 என்ற வாகனத்தை ஓட்டி வந்ததாகவும் அந்த வாகனத்தின் பின்னால் எனது பெரியப்பா மகன் குமார் அமர்ந்து வந்ததாகவும், அவர்கள் இருவரும் கண்ணலம் கிராமம் நோக்கி வந்தபோது டின. 16-எக்ஸ்-3111 என்ற டி.வி.எஸ் எக்ஸ் சூப்பர் வாகனத்தை அதன் ஓட்டுனர் ஆர்ன் அடிக்காமலும் அதிவேகமாகவும் ஆஜாக்கிரதையாகவும் வயல் வெளியில் இருந்து ரோட்டின் குறுக்கே திடிரென்று வந்து கோபிநாத் சென்ற இருக்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்து விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை இதற்கு முன்பு நான் பார்த்தில்லை. இன்றுதான் அவரை முதல்முறை பார்க்கிறேன். வழக்கு புகாரை நான் எழுதவில்லை. வழக்கு புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக நேரடியாக எனக்கு ஏதும் தெரியாது என்றால் சரிதான்.

Taken down before/me in Open
Court and read over/interpreted to
the witness and acknowledged by
him/her to be correct.
Judicial Magistrate, Gingee.